# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 83 — 1973 ඔක්තෝබර් 26 වැනි සිකුරාදා — 1973.10.26

83 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 421 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | 422 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 422 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 424 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல் ஜிடி/சிரி. 10/38

**பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்**

183 ஆம் பிரிவின் கீழான கட்டளை

**1968** இன் **42** ஆம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (**256** ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் **183** ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான், இக்கட்டளை வாயிலாக பண்டத்தரிப்பு பட்டணம் சம்பந்தமாக முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு **1973** மார்ச் **14** ன் **50/6** ஆம் இலக்க அதிவிசேடக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதன் கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் **1973** நவம்பர் **1** ஆந் திகதியிலிருந்து திருத்துகிறேன்.

"(ஆ) அக்கட்டளைச்சட்டத்தின் கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய பட்டினசபை அமைக்கப்படும் வரைக்கும் அந்நோக்கத்திற்கென அக்கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒரு பட்டின சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. என். அருணசலம் என்பவரை பண்டத்தரிப்பு பட்டினத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கின்றேன்".

நீல் த அல்விஸ்,<br>
பதில் அரசாங்க நிர்வாகம்,<br>
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,<br>
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 9 ந உ.

10–958—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

**குறுவிற்றிக் கோறளை மெதப்பற்றுக் கிராமச்சபை**

பகிரங்க அரங்காட்டுக் கட்டளைச் சட்டம்

(**176** ஆம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் **3** ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

நீல் டி அல்விஸ்,<br>
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,<br>
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, **1973** ம் ஆண்டு செத்தெம்பர் மீ **24** ந உ.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நோங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,<br>
கொழும்பு,<br>
**1972** ம் ஆண்டு மே மீ **05** ந் திகதி

**எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,**<br>
அரசாங்க அழுத்தகர்.

### விதி

(176 ம் அத்தியாயமான்) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1919 எப்பிரல் 4 ன் 7,004 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1943 ஏப்ரில் 9 ன், 9,108 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினுல் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுன விதிகள், குறுவிற்றிக் கோறளை மெதப்பற்றுக் கிராமசபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்டவரையில் அவற்றின் அ 3 ம் இலக்க விதிக்குப் பதிலாக பின்வரும் புதிய விதியை வைப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

"அ 3 (1). கட்டணம் செலுத்துவதன் பேரில் ஆட்களை அனுமதிக்கும் பகிரங்க அரங்கேற்றங்களுக்கு கட்டடம் அல்லது எழுப்பம் எதனையும் உபயோகிப்பதற்கு உத்தரவுப்பத்திரம் கோரும் விண்ணப்பகாரர் அத்தகைய உத்தரவுப்பத்திரம் அவருக்கு வழங்கப் படுதற்கு முன்னர் பின்வரும் விகிதப்படி கணக்கிடப்படும் ஒரு கட்டணத்தைச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

| | ஒரு நாளுக்கு | ஒரு கிழமைக்கு (7 நாட்களுக்கு அல்லது குறைவான காலத்திற்கு). | ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பாகத்துக்கு | திசெம்பர் 31 உடன் முடிவடையும் ஒரு வருடத்துக்கு |
|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசனசவதி செய்யப் பட்டிருக்குமிடத்து .. .. .. | 10 0 | 25 0 | 50 0 | 250 0 |
| 199 பேருக்கு மேற்பட்டோருக்கு ஆனல் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 15 0 | 35 0 | 75 0 | 350 0 |
| 399 பேருக்கு மேற்பட்ட ஆனல் 499 பேருக்கு மேற்படாத ஆட்க ளுக்கு ஆசனவசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 25 0 | 50 0 | 100 0 | 400 0 |
| 499 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட் டிருக்குமிடத்து .. .. .. | 30 0 | 75 0 | 150 0 | 500 0 |
| அரங்காட்டு, ஏதேனும் சமயக் கல்வி அல்லது தரும கைங்கரியத் தின் பொருட்டான உதவிக்காட்சியாகவிருக்குமிடத்து .. | 10 0 | 25 0 | 100 0 | |

2. இலகுவில் தீப்பற்றிக்கொள்ளக்கூடியது எனச் சபை கருதும் பொருளல்லாதவற்றினுல் கட்டப்பட்ட கட்டடங்கள் அல்லது எழுப்பங்களுக்கு மாத்திரம் வருடாந்த உத்தரவுப்பத்திரம் வழங்கப்படலாம்.

10—968—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

## பரீட்சைகளும், பரீட்சைப்பெறுபேறுகளும், பிறவும்

**உள்ளூராட்சி செயலாளர் சேவையின் தரம் 5 ற்கு ஆட்சேர்ப்பிற்கான பரீட்சை 17.11.1973**

மேற்படி பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளதென சகல விண்ணப்பதாரர்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஐப்பசி மீ 17 ந் உ.

எட்கார் பர்ணந்து,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை.

10—888—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

## வரவுசெலவுத் திரட்டுக்கள்

**பட்டின ஆட்சி மன்றம், காத்தான்குடி**

நாலாண்டுத் திட்டம்

| 1973 | அரசாங்க நன்கொடை | கடன் நிதி | சமுதாய நிதி |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. சனசமூக நிலையங்கள் .. .. .. .. | 400 0 | — | 400 0 |
| 2. மின் நிலைய வீதி பக்கவடிகான் கட்டல் .. .. .. | 2,500 0 | — | 2,500 0 |
| 3. விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல் .. .. .. | 4,000 0 | — | 8,750 0 |
| 4. மீராபள்ளி வீதி திருத்தம் செய்தல் .. .. .. | 5,000 0 | — | — |
| 5. பழைய தபால் நிலைய வீதி கல்லிட்டுத் தார் ஊற்றுதல் .. .. | 1,100 0 | — | 1,500 0 |
| 6. 2 ஆம் வட்டாரம் மௌலானு ஒழுங்கை திருத்துதல் .. .. | — | — | 1,500 0 |
| 7. வீடுத்திட்ட வீடு கட்டல் .. .. .. | 30,000 0 | — | 3,000 0 |
| 8. வயோதிபர் விடுதி கட்டல் .. .. .. | 10,000 0 | — | 5,000 0 |
| 9. 1 ஆம் வட்டாரம் போட்டு நிறுத்திய துறை ஒழுங்கை, மௌலானு ஒழுங்கை, உதுமாலெவ்வை மரைக்காயர் ஒழுங்கை ஆகிய அகலித்துக் கிறவலிடல் | | | 5,750 0 |
| 10. 2 ஆம் வட்டார ஒழுங்கை திருத்தம் செய்தல் .. .. | — | — | 5,750 0 |
| 11. 3 ஆம் வட்டாரம் முகம்மதலியார் ஒழுங்கையிலிருந்து மூன்று ரோட்டுகள் அகலித்து கிறவலிடல், வயோதிபர் விடுதிக்குச் செல்லும் ஒழுங்கைக்குக் கிறவலிடல் .. | — | — | 4,250 0 |
| 12. 4 ஆம் வட்டாரம் உமர்தீன் ஒழுங்கையும், கனிபா ஹாஜியார் ஒழுங்கையும் அகலித்துக் கிறவலிடல் .. .. .. .. | — | — | 4,250 0 |
| 13. 5 ம், 6 ம் வட்டாரம் பதுரியா ஒழுங்கை உயர்த்திக் கிறவலிடல் .. | — | — | 4,250 0 |
| 14. 7 ம் வட்டாரம் மரைக்காயர் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல், பழையதபால் நிலைய வீதி வடிகான் கட்டுதல், மத்திய வீதி ஒழுங்கை தார் ஊற்றல் .. .. | — | — | 4,250 0 |

| | | அரசாங்க நன்கொடை ரூ. | ச. | கடன் நிதி ரூ. | ச. | சமுதாய நிதி ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|
| **1974** | | | | | | | |
| 1. | மீராபள்ளி வீதியும், பழைய தபால் நிலைய வீதியும், வீட்டுத்திட்ட வீதியின் மிகுதியும் கல்லிட்டுத் தார் ஊற்றுதல் | 15,000 | 0 | — | | — | |
| 2. | வடக்கு எல்லை வீதி கான் கட்டுதல், கபுறடி வீதி திருத்திக் கட்டுதல் | 10,000 | 0 | — | | 10,000 | 0 |
| 3. | வயோதிபர் விடுதி விஸ்த்தரிப்பு | 10,000 | 0 | — | | 5,000 | 0 |
| 4. | செயலகம் அமைத்தல் வாசிகசாலையுடன் | 50,000 | 0 | 1,50,000 | 0 | 25,000 | 0 |
| | மலகூடம் கட்டுகல் | — | | — | | 5,000 | 0 |
| 5. | வீட்டுத்திட்டம் | 30,000 | 0 | — | | 3,000 | 0 |
| 6. | மாடறுக்கும் தொழுவம் சுற்றிவரக் கட்டல் | — | | 10,000 | 0 | 2,000 | 0 |
| 7. | சிறுவர் பூங்கா அமைத்தல் | 15,000 | 0 | — | | — | |
| 8. | மாடு கட்டும் தொழுவம் அமைத்தல் | — | | 5,000 | 0 | — | |
| 9. | சாவியா வீதி பக்கச் சுவர் கட்டல், பெண் பாடசாலை வீதி திருத்துதல் | — | | — | | 5,500 | 0 |
| 10. | பிரக்கிராசியார் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல், சகாப்தீன் ஆலிம் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 11. | உதுமான்சாகிபு ஹாஜியார் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றுதல், வெள்ளையர் ஒழுங்கை கல்லிட்டுக் கிறவலிடுதல், ஹுதா பேக்கரி ஒழுங்கை அகலித்துக்கல்லிட்டுத் தார் ஊற்றுதல் | — | | — | | 5,500 | 0 |
| 12. | புலவர் ஒழுங்கை அகலித்துக் கிறவலிடல், மம்மா மரைக்காயர் ஒழுங்கை கல்லிட்டுத்தார் ஊற்றுதல் | — | | — | | 5,500 | 0 |
| 13. | வாழைப்பழக் கடை ஒழுங்கை விசாலித்துக் கிறவலிடல், ஆதம்போடி ஹாஜியார் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 14. | மரைக்காயர் ஒழுங்கை அகலித்துக்கிறவலிடல், ஜின்னு ஒழுங்கை அகலித்துக் கிறவலிடல், எஸ். கே. ஹாஜியார் ஒழுங்கை அகலித்துக் கிறவலிட்டுக் கல் பரவுதல் | — | | — | | 5,500 | 0 |
| 15. | சின்னப்பள்ளி ஒழுங்கை விசாலித்துக் கிறவலிடல், 1 ஆம், 7 ஆம் எல்லைக்கான் கட்டுவதும் மத்திய ஒழுங்கை விசாலித்துக் கிறவலிடலும் கான் கட்டுதலும் | — | | — | | 5,500 | 0 |
| **1975** | | | | | | | |
| 1. | இப்றுகீம் மன்சில் றோட் திருத்துதல் | 15,000 | 0 | — | | — | |
| 2. | 2 ம், 7 ம் வட்டார மத்திய ஒழுங்கை தாரிடல், மெத்தைப்பள்ளி வீதி பக்கவடிகான் அமைத்தல், 5 ஆம் வட்டாரம் வாழைப்பழைக் கடைக்கான் கட்டல் | 10,000 | 0 | — | | 10,000 | 0 |
| 3. | வீட்டுத்திட்டம் | 30,000 | 0 | — | | — | |
| 4. | புது றோட் உயர்த்திக் கிறவலிடல், மோதின் ஒழுங்கை மிகுதி வேலை | — | | — | | 5,500 | 0 |
| 5. | பெருக்கிராசியார் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல், சகாப்தீன் ஆலிம் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 6. | ஆதம்லெவ்வை ஹாஜியார் ஒழுங்கையும், பதிவுகாரர் ஒழுங்கையும் கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 7. | சீனியர் ஒழுங்கை ஏ 1 கல்லிட்டுத் தார் ஊற்றல், கனிபா ஹாஜியார் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 8. | காந்தி ஓடாவியார் வீதி மண் நிரப்பி கிறவல் போடல் | — | | — | | 5,500 | 0 |
| 9. | கபுறடி ஒழுங்கையும், மூகைதீன் ஒழுங்கையும் கிறவலிடல் | — | | — | | 5,500 | 0 |
| 10. | பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல், சம்சுதீன் ஆலிம் ஒழுங்கை விஸ்த்தரித்தல் | — | | — | | 5,500 | 0 |
| **1976** | | | | | | | |
| 1. | பள்ளிவாசல் வீதியும் அப்துல்றகுமான் மௌலானா ஒழுங்கையும் கல்லிட்டுத்தார் ஊற்றுதல், தீர்வைத்துறை றோட் தார் ஊற்றுதல் | 15,000 | 0 | — | | — | |
| 2. | மீரா்பள்ளி றோட் பக்கவடிகான் அமைத்தல் | 5,000 | 0 | — | | 5,000 | 0 |
| 3. | ஊறெல்லை தெரு மண் நிரப்பிக் கிறவலிடல், கக்கூசை வழைத்துச் சுவர் கட்டி மண் நிரப்பல் | — | | — | | 5,500 | 0 |
| 4. | ஹக்குப்பிள்ளை ஒழுங்கையும், இஸ்மாயில் ஓடாவியார் ஒழுங்கையும் கல்லிட்டுத் தார் ஊற்றுதல் | — | | — | | 5,500 | 0 |
| 5. | ஹயாத்து முகம்மது ஒழுங்கை விஸ்த்தரித்தலும், ஹுதா பேக்கரி ஒழுங்கை விஸ்த்தரித்தலும் | — | | — | | 5,500 | 0 |
| 6. | ஓடாவியார் ஒழுங்கை, புலவர் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 7. | இஸ்மாயில் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 8. | பாவா ஒழுங்கை, மஜீது தெற்கு எல்லை ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |
| 9. | சீனி ஹாஜியார் ஒழுங்கை கல்லிட்டுத் தார் ஊற்றல் | — | | — | | 5,500 | 0 |

பட்டின ஆட்சி மன்ற அலுவலகம்,
காத்தான்குடி,
1973 ம் ௵ மார்ச் ௴ 15 ந் உ.

ஏ. எம். எம். இப்றுகீம், ஜே. பி.
தலைவர்,
பட்டின ஆட்சி மன்றம்,
காத்தான்குடி.

10–953—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

# நானாவித அறிவித்தல்கள்

## மாத்தளை மாநகர அலுவலகம்

மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 159 ம் பிரிவின்படி அறிவித்தல்
(252 ம் அதிகாரம்)

வில்லியம் எர்ல்டி அல்விஸ் ஆகிய நான் விசேஷ ஆணையாளர் மாத்தளைநகரம், மாத்தளை, மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (252 ம் அதிகாரம்) 277 (2) (அ) ப் பிரிவினுனும் 159 ம் பிரிவினுலும் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ்க் காணும் பிரசித்த வீதிகளிலோ அன்றி ஓரத்திலோ பொருட்களை விற்பதும், காட்சிக்கு வைப்பதும், இவ்வறிவித்தல் அரசாங்க வர்தமானியில் பிரசுரிக்கும் தினத்திலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

1. குமார வீதி.
2. கந்தசாமி மாவத்த.
3. பேளுட் அலுவிகரா மாவத்த (குமார வீதி சந்தி தொடக்கம் மீசான் மாவத்த (முன்பு ரேசா வீதி) சந்தி வரையும்).
4. மீசான் மாவத்த (முன்பு ரேசா வீதி).
5. புகையிரத நிலையத்திற்குச் செல்லும் பாதை.

இத் தடையை மீறுவோர் ரூபா 20 றகுக் குறையாத குற்றப்பணம் செலுத்துவதற்காளாவர்.

ஏர்ல்டி அல்விஸ்,
விசேஷ ஆணையாளர்,
மாத்தளை நகரம்.

விசேஷ ஆணையாளர் அலுவலகம்,
மாத்தளை நகரம், மாத்தளை,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 20 ந் வ.

10–823—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

## மன்னார் மாவட்டம் முசலி வடக்கு கிராமாட்சிமன்றம்

முக்கிய அறிவித்தல்

இத்தால் சகலருமறியவேண்டியது 1974 ம் ஆண்டு முசலி வடக்கு கிராமாட்சி மன்றத்தின் எல்லைக்குள் உள்ள துவிச்சக்கரவண்டி, இரட்டை மாட்டு வண்டி ஆகிய மிருக வாகனங்களுக்கும், வியாபாரத் தொழில் நிலையங்களிற்கும் இதன் கீழ் அட்டவணையில் குறிக்கப்பட்ட வரி விகிதங்கள் 1974 ம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படும். வரிசெலுத்தப் பாத்திரமானோர் 1974 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் எமது கிராமாட்சிமன்ற வருமான வேலை மேற்பார்வையாளரிடமோ அல்லது முசலி வடக்கு கிராமாட்சிமன்ற அலுவலகத்திலோ உரிய வரிகளைச் செலுத்தி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வரி நிலுவைகள் அனைத்தையும் 1974 ம் ஆண்டு பங்குனி 31 ம் திகதிக்கு முன்னர் கட்டி, உத்தரவுச் சீட்டைப் பெறத் தவறுபவர்கள் மீது கிராம சபைகள் கட்டளைச்சட்டம் 257, 42 ம் பிரிவின் கீழ் இச்சபையால் ஆக்கப்பட்ட உபவிதிகளை மீறிய அடாத்திற்கு, சட்டத்தின் 56 ம் பிரிவின் கீழ் வழக்குத் தொடர்ந்து வரி நிலுவைகள் முழுவதையும் செலவுத் தொகையுடன் அறவிடப்படும் என்பதும் இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

### செலுத்தவேண்டிய வரி விகிதங்கள் பற்றிய அட்டவணை

| உத்தரவுச் சீட்டின் தன்மை | செலுத்த வேண்டியவரி ரூ. ச. |
|---|---|
| 1. வண்டில் வாகனங்கள்— | |
| (1) இரட்டை மாட்டு வண்டில் ஒன்றுக்கு .. | 3 00 |
| (2) துவிச்சக்கர வண்டியொன்றுச்கு .. | 1 00 |
| 2. உணவுப் பொருட்களை விற்பனை செய்யுமிடம், பலசரக்குக் கடை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 15 00 |
| 3. தேனீர்க்கடையொன்றை வைத்திருப்பதற்கு .. | 10 00 |
| 4. பழக்கடை, காய்கறிக்கடை ஒன்று வைத்திருப்பதற்கு .. | 10 00 |
| 5. பதனிட்ட மீன், அல்லது கருவாடு விற்பனை செய்வதற்கு அல்லது சேகரித்து வைத்திருப்பதற்கு .. | 15 00 |
| 6. கொல்லுலை ஒன்று வைத்திருப்பதற்கு .. | 15 00 |
| 7. ஆபரணங்கள் செய்யுமிடம் ஒன்று வைத்திருப்பதற்கு .. | 15 00 |
| 8. கடலட்டை சேகரித்து வைத்திருப்பதற்கு .. | 10 00 |
| 9. மிதி வண்டி பழுதுபார்க்கும் இடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. .. .. | 10 00 |
| 10. பாண்சாலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 20 00 |
| 11. (அ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதான பகுதி ஒன்றுக்கு .. .. .. | 100 00 |
| (ஆ) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றுக்கு .. | 50 00 |
| 12. அரிசி ஆலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 00 |
| 13. செங்கல் உற்பத்தி நிலையம் ஒன்றை வைத்திருப்பதற்கு | 50 00 |
| 14. தகர வேலைக் கூடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 10 00 |
| 15. தச்சு வேலைக் கூடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 10 00 |
| 16. இரும்புக் கடை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 00 |
| 17. மண்ணெண்ணெய் வியாபாரத்துக்கு .. | 10 00 |
| 18. ஆடு, மாடுகள் ஏற்றுமதி செய்வதற்கு .. | 25 00 |
| 19. மாட்டிறைச்சிக்கடை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 00 |
| 20. லோன்றி ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 10 00 |

மு. மீராசாகிபு,
முசலி வடக்கு கிராமாட்சி மன்றத் தலைவர்.

முசலி வடக்கு கிராமாட்சிமன்ற அலுவலகம்,
அரிப்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 12 ந் வ.

10–959—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

---

## கிளிவெட்டி கிராம சபை

உள்ளூரதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்

(261 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் திருகோணமலை மாவட்டத்து கிளிவெட்டி கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

அரசாங்க நிர்வாகம் உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 15,001 ஆம் இலக்க 10.03.72 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகளின் பாகங்கள் 1, 2, 3 ம், இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று கிளிவெட்டிக் கிராமசபை (261 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

பூ. விநாயகமூர்த்தி,
தலைவர்,
கிளிவெட்டி–கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
கிளிவெட்டி.

10–870—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 05.10.73 | வெள்ளி | 28. 9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 05.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 12.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 19.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 02.11.73 | வெள்ளி | 26.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.11.73 | வெள்ளி | 02.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 09.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 16.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 23.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 07.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.